Ragistered as a News Papet

பக்கங்கள் 04

விலை ரூபா: 5-00

நல்லூர் பிரதேச நூலகம்
மாநகர சபை மன்றம்
யாழ்ப்பாணம்

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்:- 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 வைகாசி 20 (02 - 06 - 1992) செவ்வாய்க்கிழமை ஓசை: 105

## தாக்குதலின் எதிரொலி அம்புலன்ஸ் சேவை நிறுத்தம்

பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் வரை தெல்லிப்பழையிலிருந்து அம்புலன்ஸ் சேவை நடத்தப்படமாட்டாது என தெல்லிப்பழை வைத்தியசாலை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. கடந்த ஒருவருடமாக சிறிலங்கா இராணுவ நடவடிக்கை சன் வலிவடக்கில் ஆரம்பமான காலத்திலிருந்துமேற்படிஅம்புலன்ஸ் வண்டி செல்விப் பழை துர்க்கை அம்மன் ஆலயப்பகுதியிலிருந்து சேவையில் ஈடுபட்டது தெரிந்ததே நேற்று முன் தினம் மேற்படி அம்புலன்ஸ்மீது குண்டு வீச்சு விமானங்கள் உலங்கு வானூர்திகளும் துரத்தித் துரத்தி தாக்குதலை நடாத்தியதுடன் தெல்லிப்பழை அரசினர் மருத்துவ மனையையும் தரைமட்டமாக் (4 ஆம்பக்கம் பார்க்க)

# அலம்பில் பகுதியில் கடும் சண்டை

# இராணுவ தரப்பில் பாரிய இழப்பு

## கவச வாகனம் புலிகளால் தகர்ப்பு

(முல்லைத்தீவு)

அலம்பிலை நோக்கி முன்னேற முயன்ற இராணுவத்தினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்றும் உக்கிரமோதல்கள் இடம்பெற்றன. நேற்றுக்காலை விமானப்படையின் உதவியுடன் முன்னேற முயன்ற இராணுவத்தினரை எதிர்கொண்டு விடுதலைப் புலிகள் நடத்திய துணிகரம் மிக்க தாக்குதலினால் இராணுவத்தினருக்குப் பெரும் உயிரிழப்பு ஏற்பட்டது. ஒரு கவச வாகனம் புலிகளால் அழிக்கப்பட்டது. இக்கடும் சண்டையின்போது பதினொரு விடுதலைப் புலிகள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்.

கடந்த வியாழக்கிழமை முல்லைத்தீவு இராணுவ முகாமில் இருந்து 2500 க்கு மேற்பட்ட இராணுவத்தினர் 40 க்குமேற்பட்ட கவச வாகனங்கள் சகிதம் அலம்பிலை நோக்கி முன்னேற முயன்றமையும், புலிகளின் கடும் எதிர்த்தாக்குதலினால் இராணுவத்தினர் 4 ஆம் கட்டைக்கும் 5 ஆம் கட்டைக்கும் இடையில் தரித்துநின்றமையும் தெரிந்ததே.

நேற்று காலை சிறிலங்கா இராணுவத்தினர் நன்கு குண்டு வீச்சு விமானங்களும் ஒரு அவ்ரோ இரண்டு உலங்கு வானூர்திகள் என்பன தாக்குதல் நடத்திக் கொண்டிருக்க கடும்ஷெல் தாக்குதலை மேற்கொண்டவாறு அலம்பில் சந்தியை நோக்கி முன்னேறமுயன்றனர்.

முன்னேற முயன்ற இராணுவத்தினர் மீது காலை 9 00 மணியளவில் அலம்பில் சந்திக்கு அருகில் வைத்து விடுதலைப் புலிகள் கடும் தாக்குதலை மேற்கொண்டனர் இச்சண்டை 11 00 மணிவரை நீடித்தது இராணுவத்தினர் முன்னேற முடியாது அவ்விடத்திலேயே நிலைகொண்டனர்.

பின்னர்பிற்பகல் 1 30மணியளவில் மீண்டும் முன்னேற முயன்ற போது விடுதலைப் புலிகளால் இராணுவத்தினர் [4 ஆம் பக்கம் பார்க்க]

வீரச்சாவு



வீரவேங்கை அறிவொளி

முல்லைத்தீவு ஐந்தாம் கட்டையில் [31 05-1992 அன்று சிறிலங்கா இராணுவத்துடன் ஏற்பட்டபெரும்மோதலில் வீரவேங்கை அறிவொளி (நாகரத்தினம் கிருபா, உருத்திரபுரம், கிளிநொச்சி) வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

## தெல்லிப்பழையில் தொடர்ந்து சமர்

## யுத்த சூன்யபிரதேசத்தில் குண்டுவீச்சு

கட்டுவன, விமன்காமம், மாவிட்டபுரம் பகுதிகளிலிருந்து கடந்த சனிக்கிழமை வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினருக்கும்,விடுதலைப் புலிகளுக்குமிடையில் தெல்லிப்பழையை அண்டிய பகுதிகளில் நேற்றும் மோதல்கள் இடம் பெற்றன.

கடந்த இரண்டு நாட்களாக நடைபெற்ற விமானத் தாக்குதல்களும் எறிகணைத் தாக்குதல்களும் நேற்று சற்று தணிந்து காணப்பட்ட போதிலும் ஆங்காங்கே மோதல்கள் இடம்பெற்றவண்ணமிருந்தன.

இத்தாக்குதலினால் சிறிலங்கா இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேதவிபரம் உடனடியாகத் தெரியவரவில்லை.

இதேவேளை தாக்குதல் தவிர்ப்பு வலயத்தினுள் சிறி

மணியளவில் சேந்தான்குளம் கீரிமலை வீதியில் உள்ள வலித்தூண்டல் என்னுமிடத்தில் சிறிலங்காவின் இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் இரண்டு குண்டுகளை வீசின. இவை வீழ்ந்து வெடித்ததில் அப்பகுதியில இரண்டு வீடுகள் பலத்த சேதமாகின.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மேற்பார்வையின் கீழ் சேந்தான்குளம் கீரிமலை வீதி தாக்குதல் தவிர்ப்பு பகுதியாக பிரகடனப்படுத்தப் பட்டது தெரிந்ததே. இப்பகுதியிலேயே கடந்த சனிக்கிழமை மாலையும், நேற்று காலையும் குண்டு வீச்சு தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

## வீடு பார்க்கச் சென்ற நால்வரைக் காணவில்லை

(நமது நிருபர்)

வலி வடக்கில் வீடுபார்க்கச் சென்ற நால்வர் சிறிலங்கா இராணுவத்தினரால் கொல்லப்பட்டிருக்கலாம் அல்லது கைது செய்யப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது.

சென்ற சில நிமிட நேரங்களில் சரமாரியான துப்பாக்கிவேட்டுக்கள் கேட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் இவர்கள் அப்பகுதிகளில் பதுங்கியிருந்த இராணுவத்தினரால் சுடுக்

## போக்குவரத்துச் சேவை

(மன்னார்)

கிளிநொச்சிக்கும் மன்னார் மடு தேவாலயத்திற்கும் இடையே போக்கு வரத்துச் சேவை இன்று முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இச் சேவை மடுவிலிருந்து ஆண்டான்குளம், விடத்தல் தீவு, முழங்காவில், பூநகரி ஊடாக கிளிநொச்சி சென்றடையும்.

காலை 6 30 மணிக்கு மடுவிலிருந்தும், பிற்பகல் 1. 30 மணிக்கு கிளிநொச்சியிலிருந்தும் சேவைகள் ஆரம்பமாகும்.

# 11 வேங்கைகள் வீரச்சாவு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு இராணுவ முகாமிலிருந்து அலம்பில் நோக்கி முன்னேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் கடும் தாக்குதல்களை மேற்கொண்டுவருகின்றனர் நேற்று அலம்பில் சந்திக்கு அருகில் இடம்பெற்ற கடும் மோதலில் 11 போராளிகள் வீரச்சாவு அடைந்தனர்.

வீரச்சாவு அடைந்த வீரவேங்கைகள் மயூரன் (இடியாம்பி-இராசலிங்கம் ஆனந்தராசா-ஒலுமடு மாங்குளம், 7 ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு). விசுவாசப் (ஐம்பிள்ளை ஜெயக்குமார், ஊர்காவற்துறை,காந்திகிராமம் கோணாவில்) கணேசன் (நிக்லஸ்-பாலச்சந்திரன் ரகுதாஸ் அம்பாளகுளம் 2 ஆம் பகுதி கிளிநொச்சி). யோகமூர்த்தி (வாணன்-வெள்ளைக்கண்டு விஜாகுமாரி -7 ஆம் வாய்க்கால் கிளிநொச்சி) அதிரவேல்(கோபு-ஈஸ்வரன் ராசன் இராமனூர். புளியங்குளம்) கிருஷ்ணமூர்த்தி [சிவராசா பரமநாதன்,பெரியகுளம்வீதி, நெடுங்கேணி] தியாகு [இராசையா சிவகுமார் திருக்கோணமலை, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு] பதுமன் [வேலுப்பிள்ளை ராஜேந்திரன் கவுடி பொலபேஸ்ட, மாலவசந்த, மாத்தளை], யேசுநேசன [பொன்னம்பலம் செந்தமிழ்ச் செல்வன் மாந்தை,மன்னார்] இறைகுமாரன்[தபாளன் ரவீந்திரந தன் வேந்தன் மயிலியதனை, தொண்டமானாறு] அமுதன் [சிபாதம் அமுதன் கருநாட்டுக்கேணி, கொக்குதொடுவாய், பூதம்வயல், கணு

(4 ஆம் பக்கம் பார்க்க)



வீரவேங்கை முகிலன்
கட்டுவன் பகுதியில் 31-5 92

[4 ஆம் பக்கம் பார்க்க]

லங்கா விமானப்படை விமானங்கள் நேற்றுக்காலை குண்டுவீச்சுத் தாக்குதலை மேற்கொண்டன.

நேற்றுக்காலை ஒன்பது

## எறிகணைவீச்சு

(யாழ்ப்பாணம்)

யாழ் கொட்டடிப்பகுதி நோக்கிமண்டைதீவுப்பகுதியில் இருந்து நேற்றும் சிறிலங்கா இராணுவத்தினரால் எறிகணைதாக்குதல்கள் நடத்தப்பட்டது மாலை 5 30மணியளவில் நடாத்தப்பட்ட இத்தாக்குதல்களினால் பெரிய அளவிலான சேதம் எதுவும் ஏற்படவில்லை.

வலிவடக்கில்கொல்லன்கலட்டிப் பகுதியில் இருந்த தமது வீட்டிலிருந்து சில பொருட்களை எடுத்து வருவதற்காக நேற்று முன்தினம் காலையில் சென்ற இருவரும் நேற்றுக் காலையில் சென்ற இருவருமே நேற்றுமாலைவரைதிரும்பிவரவில்லை என தெரியவருகிறது. இவர்கள் அப்பகுதிககுச் கொல்லப்பட்டிருக்கலாம் அல்லது காயமடைந்த நிலையில் அவர்களால் கைதுசெய்யப்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுகிறது இவர்கள் நாலவரினதும் நிலைமையினை அறிந்து கொள்வதற்காக உறவினர்கள் வீதிகளில் காத்து நிற்கின்றனர்.

# மாந்தையில் துணிகரத் தாக்குதல்

# 6 இராணுவம் பலி: பலர் காயம்

(மன்னார்)

மன்னார் மாவட்டம் மாந்தை இராணுவ முகாமிலிருந்து வெளியேறி வந்த இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் கிளைமோர் தாக்குதலையும் அதிரடித் தாக்குதலையும் நடாத்தியுள்ளனர். இத்தாக்குதல்களில் ஆறுக்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

நேற்று காலை 5.53 மணியளவில் மாந்தை இராணுவ முகாமிலிருந்து அடம்பன் வீதி வழியாக 10 க்கு மேற்பட்ட இராணுவத்தினர் வெளியேறி வந்தனர்.

இராணுவத்தினர் துப்புரவு வேலையில் ஈடுபட்டவாறு 350 யார் தூரம்வரை முன்னேறி வந்தபோது இவர்கள் மீது கிளைமோர் தாக்குதலும் அதிரடித் தாக்குதலும் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்டது. 10 நிமிட நேரம்வரை இடம் பெற்ற

[4 ஆம் பக்கம் பார்க்க]

## இறந்தோர் தொகை 23 ஆக அதிகரிப்பு

(நமது நிருபர்)

வலிவடக்கில் கடந்த சனி, ஞாயிறு தினங்களில் சிறிலங்கா முப்படைகளும் இணைந்து மக்கள் குடியிருப்புகள் மீது நடாத்திய அகோரத் தாக்குதல்களில் சிக்கிப் பலியான பொதுமக்களின் எண்ணிக்கை 23 ஆக அதிகரித்துள்ளது. சிறிலங்காப்படையின் கண்மூடித்தனமான தாக்குதல்களிலால் பலியான பதினைந்து பேர்களது பெயர் விபரங்கள் ஏற்கனவே வெளியாகின இவர்கள் தவிர்ந்த எறிகணையால் பலியான ஏனைய மிகுதி எட்டுப் பேர் பற்றிய விபரங்கள் தற்போது கிடைத்துள்ளன அவ்விபரங்கள் வருமாறு: சாந்தினி (வயது16) ஏழாலை மணியம் ராணி (வயது 30) இவர் தெல்லிப்பழை அகதி முகாமில்வசித்தவர். மனுவேல்பிள்ளை அரசரட்ணம் (வயது 73) தெல்லிப்பழை. செல்வராசா செல்வச்சந்திரன் (தெல்லிப்பழை, ஜெபச்சந்திரன் (தெல்லிப்பழை), சந்துரு [வயது32] கொல்லன்கலட்டியைச்சேர்ந்த இவர் ஒரு மனநோயாளி என்பது குறிப்பிடத்தக்கது.

இவர்களைவிட சீமெந்து

(4 ஆம் பக்கம் பார்க்க)

# தனிநாடு பிரிந்துவிடும் புலிகள் கை ஓங்கிவிடும்

## தமிழ்க்குழுக்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

இனப் பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றை முன்வைக்க நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக் குழுவைப் பகிஷ்கரிப்பது என்ற பிரதான எதிர்க்கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முடிவு தமக்கு அதிருப்தியைத் தந்திருப்பதாக ஐந்து தமிழ்க்குழுக்களும் தெரிவித்துள்ளன.

ஈரோஸ் பேச்சாளர் சங்கர் ராஜி சுருசதுத் தெரிவிக்கையில், சிறிலங்கா சுதந்திரக் கட்சி மத்திய குழுவின் முடிவு விடுதலைப் புலிகளைப் பலப்படுத்துவதேடு, தமக்கென்று தனிநாடுஒன்றை அமைப்பதன் மூலம் விடுதலைக்கு வழி தேடும் நிலைக்குத்தள்ளிவிடும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சுதந்திரக் கட்சிக்குள் கருத்து முரண்பாடு

(கொழும்பு)

பாராளுமனறத் தெரிவுக் குழுவைச் சிறிலங்கா சுதந்திர கட்சி பகிஷ்கரிப்பது என்ற மத்திய குழுவின் முடிவு குறித்துக கட்சிக்குள் அபிப்பிராய பேதம் நிலவுவதாகத்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

(மன்னார்)

நேற்றுக்காலை மன்னார் மாவட்டம் மாந்தை இராணுவ முகாம் இராணுவத்தினர்மீது விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட வெற்றிகரமான தாக்குதலில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு;

| | |
|---|---|
| ★ ஏ.கே.எல்.எம்.ஜி. | - 01 |
| ★ ரி - 56 - 2 | - 02 |
| ★ ரி - 56 - 1 | - 02 |
| ★ ரி - 81 | - 01 |
| ★ ஏ.கே.எல்.எம்.ஜி. லிங்குடன் ரவை | - 486 |
| ★ ரி - 56 மகசீன் | - 11 |
| ★ ரி - 81 மகசீன் | - 04 |
| ★ நடுத்தர ரவைகள் | - 765 |
| ★ ஜெ.ஆர் கைக்குண்டு | - 07 |
| ★ ரம்மகசீன் | - 04 |
| ★ ஏ.கே எல்.எம் ஜி. கோல்சர் | - 01 |
| ★ ஏ. கே. கோல்சர் | - 03 |
| ★ சப்பாத்து சோடி | - 04 |
| ★ தலைக்கவசம் | - 02 |
| ★ இடபாக் | - 02 |
| ★ தண்ணீர் கான் | - 01 |
| ★ மழை அங்கி | - 01 |

# மங்கள முனசிங்கா ராஜினாமா செய்வார்

[கொழும்பு]

களுத்துறை மாவட்ட சுதந்திரகட்சிப் பாராளுமன்ற உறுப்பினரும்,பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் தலைவருமான மங்கள முனசிங்கா தமதுதலைவர் பதவியிலிருந்து விலகவிருப்பதாகக் கொழும்பில் அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றன.

இனப பிரச்சினைக்குச் சமாதானத தீர்வொன்றைக் காணும் நோக்கத்துடன் மங்கள முனசிங்கா கொண்டுவந்த தீர்மானத்தைப் பாராளுமன்றம் அங்கீகரித்தது. சுதந்திரக் கட்சி பாராளுமன்றக் குழுவும்

[4 ஆம் பககம் பார்க்க]

# புலிகளுடன் பேசுவது குறித்து ஆத்திரப்படக் கூடாது

## இந்தியாவிற்கு தொண்டமான் அறிவுறுத்து

(கொழும்பு)

இந்தியா விடுதலைப்புலிகள் மீது விதித்த தடை புலிகளுக்கும், சிறிலங்கா அரசுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளைப் பாதிக்காது. எமது நன்மை கருதி நாம் செய்வது குறித்து மற்றவர்கள் எம்மீது ஆத்திரம்கொள்ள முடியாது. இந்தியா புலிகளுக்கும் மற்றவர்களுக்கும் இராணுவப் பயிற்சி கொடுத்தது. சிறிலங்கா குறித்து இந்திய அரசு கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. இந்தியா அதன் தேசிய நலன்கருதி அப்படிச் செய்தது இதேபோல் எமது

[4 ஆம் பக்கம் பார்க்க

## வரி விளம்பரம்

### மீண்டும் புதிதாய் பிறப்போம்

மீரா வெளியீடு சிதம்பர திருச்செந்திநாதன் எழுதிய புதிய நாவல் விற்பனையாகிறது. "சோதனைகள் நிறைந்த காலத்தில் வாழ்ந்தாலும் மனம் தளராத இந்த மண்ணின் மைந்தர்களின் கதை" (2625)

### தவறி விட்டது

25. 05 .1992 அன்று யாழ்ப்பாணம் நெல்லியடி இடையில் சுப்பன் அருந்தவராஜா (பருத்தித்துறை) என்னும் பெயருடைய பாஸ்போட் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து நெல்லியடி, மொடோன் ஸ்ரோர்ஸ் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். (2624)

## "ஆதாரம்" கலந்துரையாடல்

(கொழும்புத்துறை)

தமிழீழ ஆய்வு நிறுவனத்தால் வெளியிடப்படும் 'ஆதாரம்' இதழ் தொடர்பாகக் கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 6ம் திகதி 6- 6- 92) சனிக்கிழமை காலை 10. 00 மணிக்கு தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் தாவடியில் உள்ள மையப் பணியகத்தில் நடைபெறவுள்ளது. (24)

## படிவங்களை ஒப்படைக்கவும்

1992 ஆம் ஆண்டிற்கான 5 ஆம் ஆண்டுப் புலமைப் பரிசிற் பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்களைப் பாடசாலை அதிபர்கள் தங்கள் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களிடமிருந்து உடனடியாகப் பெற்றுப் பூரணப்படுத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர்களிடம் காலதாமதமின்றிச் சமர்ப்பிக்கும் வண்ணம் யாழ். கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

# சீரழிவை நோக்கிய திசையில் யாழ் மாவட்ட கூ.சங்கங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் பல நோ. கூ சங்கங்கள் பலவீனப்பட்ட நிலையில் இயங்கி வருகின்றன. இந்த நிலை தொடருமானால் கூட்டுறவு அமைப்பு அழிக்கப்படுவதுடன், கூட்டுறவு ஊழியரின் வாழ்க்கை நிலையும் மிகவும் பாதிக்கப்படும்.

இவ்வாறு கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம் யாழ்ப்பாணம் அரச அதிபருக்கு அனுப்பிய மகஜரொன்றில் தெரிவித்துள்ளது.

அந்த மகஜரில், 1990 இற்கு முன்பு யாழ் மாவட்டத்தில் அத்தியாவசிய உணவுப்பொருட்களின் விநியோகம் உணவுத் திணைக்களத்தினாலும், கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தினாலும் யாழ். குடாநாட்டிலுள்ள பல. நோ. கூ. சங்கங்களிற்கு வழங்கப்பட்டு வந்தன. அத்துடன் பேக்கறி, பொதுஸ்தாபனம், தனியார் ஸ்தாபனங்களுக்குத் தேவையான அத்தியாவசியப்பொருள்களைப் பெற்றுக்கொள்ள அனுமதி வழங்கி வந்தது. ஆனால் இந்த முறை முழுதாகக் கைவிடப்பட்டுள்ளது என்றும்,

யாழ் பல. நோ. கூ.சங்கங்களின் எல்லைப் பரப்பினுள் மூன்று வர்த்தக திணைக்களக் கடைகள் ஏற்கனவே திறக்கப்பட்டு இயங்கி வருகின்றன. மேலும் தனியார் ஸ்தாபனம் பேக்கறி பொதுஸ்தாபனம் ஆகியவற்றிற்குப் பொருள்கள் அரச களஞ்சியங்களில் இருந்து பெற்றுக்கொள்ளப் புனர்வாழ்வுப் பகுதியினரால் அனுமதி வழங்கப்பட்டு வருகின்றது இதனால் பல. நோ. கூட்டுறவுச்சங்கங்களின் வியாபாரம் விநியோக ஸ்திரப்பாடு குறைந்து சங்கங்கள் வீழ்ச்சி அடைந்து பலவீனப்பட்டு உள்ளன என்றும்.

வர்த்தகத்திணைக்களக்கடைகளுக்குப் பங்கீட்டுத்திட்ட அடிப்படை உணவுமுத்திரை உப உணவுப் பங்கீட்டு அட்டையோ இல்லை. இக் கடைகளுக்குப் புனர் வாழ்வுப்பகுதி இப் பொருள்களைத் தாராளமாக வழங்குவதால் இப் பொருள்கள் வெளிச்சந்தைக்கு வரக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படும். ஆகவே தங்களால் இப்போது பின்பற்றப்படும் முறை பாவனையாளர்களுக்குஎவ்வித நன்மையும் அளிக்காது.

1990 91 களில் கடும் இராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்தவர்களுக்கு தேடிச் சென்று ஆபத்துகள் மத்தியிலும் உணவு விநியோகம் செய்துள்ளோம் என்றும் மேற் குறிப்பிட்டவற்றைக் கருத்தில் கொண்டு 1990-ம் ஆண்டிற்கு முன்பிருந்த நடைமுறையை ஏற்படுத்தும் படியும் கூட்டுறவுச் சங்கங்களை அத்தியாவசியப்பொருட்களின் ஏகவிநியோகஸ்தர் அங்கீகரிக்கும் படி கோரப்பட்டுள்ளது

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## மன்னாருக்கு போதைப்பொருள்

(கொழும்பு)

புத்தளம் கற்பிட்டியில் இருந்துமன்னாருக்குபோதைப் பொருள்களைக் கடத்திச் செல்ல முற்பட்ட இருவர் கூட்டுப்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர் இவர்களிடமிருந்து நூற்றியிரண்டு கிராம் ஹெரோயின் போதைப் பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளது.

## குமண நாளை வருகிறது

[யாழ்ப்பாணம்]

அத்தியாவசிய பொருள்களுடன் 'குமண' கப்பல் கொழும்பிலிருந்து புறப்பட்டுள்ளது. இக்கப்பல் நாளை புதன் கிழமை வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இக்கப்பலில் 140 மெற்றிச்


## அறிவித்தல்

### தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம் (வது)

சங்கத்தின் சகல பணியாளர்களையும் 2.6.92 செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணிக்கு மானிப்பாய் பரிஷ் ப. நோ. கூ. சங்க காரியாலயத்தில் தவறாது சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தலைவர்
1-6-92 தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம் (வது)
[2627] தெல்லிப்பழை.


## ஓராண்டு நினைவஞ்சலி




லெப். ரவி
(இ. குமாரசாமி சாந்திக்குமார்)

தோற்றம்: 30 - 11 - 1972 தாயகமண்ணில்: 14 - 06 - 1991

திதி : 02 - 06 - 1992

எண்ணத்தில் இத்தேச விடுதலையை தேக்கியவன்
கண்ணென எல்லையை காத்திடவே
மண்ணைச் சிவப்பாக்கி மகிழ்வோடு முத்தமிட்டு
ஆண்டு ஒன்று போனதடா! போகாது உன் நினைவு!!



வடமராட்சி அரசியல் பிரிவுப் பொறுப்பாளரும், வடமராட்சி பதில் பொறுப்பாளருமான

# மேஜர் சலாம் அவர்கள்

( வ. சி. நல்லராசன் (பழம்) இமையாணன் )

தமிழ்த் தாய்க்கரங்களில்
17-09-1956

தமிழர் தம்மனங்களில்
02-06-1988

யாரை யார் தேற்றுவார் - இங்கு
ஆரை ஆர் ஆற்றுவார்
வீரிட்டு அலறிடும் மனந்தனை ஆற்றிடும்
பாரினில் நின் புகழ் மேன் மேலும்
பரவி வளர்ந்திடக் கண்டே ....

தமிழ் வளர் சோலை,
இமையாணன்,
உடுப்பிட்டி.

குடும்பத்தினர்.

[2623]

இக்கப்பலில் 140 மெற்றிச் தொன் மாட்டுத் தீனியும், 1646 மெற்றிச் தொன் சீனியும், மற்றும் பருப்பு, சவர்க்காரம், மல்லி, உள்ளி, வெந்தயம், சிறுசீரகம் இவற்றுடன் மே மாதத்திற்கான பென்சன் வவுச்சர்களும், யாழ் போதனா வைத்தியசாலைக்குத் தேவையான முக்கிய மருந்து வகைகளும், குழந்தைகள் பாதுகாப்பு நிதியத்திற்கான மண்வெட்டிகள் மற்றும் தனியார் துறை சார்ந்த பொருள்களும் இக்கப்பலில் எடுத்து வரப்படுகின்றன. (பா)

## அமிர்தராணி மீது வழக்கு தாக்கல்

(கொழும்பு)

பம்பலப்பிட்டிவிடுதிஒன்றில் கைது செய்யப்பட்ட, இந்து கலாசார அமைச்சில் தட்டெழுத்தாளராக கடமையாற்றிய அமிர்தராணி தியாகராஜாவுக்கு எதிராக சட்டமா அதிபர் வழக்குத் தொடுத்துள்ளார்.

இவரது குற்றப் பத்திரிகையில் 2. 11. 91க்கும் 31 12 91க்கும் இடைப்பட்ட காலத்தில் வரதன் என்பவர் குற்றம் ஒன்றை புரிய உள்ளதை தெரிந்து வைத்திருந்தும் அந்த தகவலை பொலிஸாருக்கு கொடுக்க மறுத்ததிற்காக பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் தண்டனை விதிக்கக் கூடிய குற்றம் புரிந்திருப்பதாக குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

இவரது குற்றப் பத்திரிகை மேல் நீதிமன்றத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## லஞ்சக் குற்றச்சாட்டு இன்ஸ்பெக்டர் கைது

(கொழும்பு)

கைலஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டின் பேரில் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் லஞ்ச விசாரணைத்திணைக்கள அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நாரஹேன்பிட்டி பொலிஸ் போக்குவரத்துப் பிரிவில் கடமையாற்றும் இன்ஸ்பெக்டர் ஒருவர் சட்டவிரோதமாகச் சாராயம் விற்பனைசெய்யும் நபர் ஒருவரிடமிருந்து இரண்டாயிரம் ரூபா லஞ்சம்பெற்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

ஆண்டு ஒன்று போனதடா! போகாது உன் நினைவு!!

02-06-92 இல் ஓராண்டு திதியில் கலந்துகொள்ளுமாறு இயக்கத் தோழர்கள், நண்பர்கள், உறவினர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சாந்திக்குமார் வீதி,
துன்னாலை வடக்கு

பெற்றார், உறவினர்
(சி/4485)

# நினைவுகூருகின்றோம் ...

## 1992-06-02

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் மன்னம்பிட்டியில் சிறிலங்காப்படையினரால் கைதுசெய்யப்பட்டு காணாமல்போன 34 தமிழர்கள்

1986 ஆம் ஆண்டு மட்டக்களப்பில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 2 தமிழர்கள் சுட்டுக்கொல்லப்பட்டபின் கிரான் ஆற்றில் வீசப்பட்ட 3 தமிழர்கள்

திருக்கோணமலை செல்வநாயகபுரம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 12 தமிழர்கள்

1987 ஆம் ஆண்டு வடமராட்சிப் பகுதியில் எட்டாவது நாளாக சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட ''ஒப்பறேசன் லிபறேசன்'' நடவடிக்கையின்போது படுகொலைசெய்யப்பட்ட 15 தமிழர்கள்

1988 ஆம் ஆண்டு அம்பாறை காரைதீவுப் பகுதியில் தேசவிரோத சக்திகளினால் கொலை செய்யப்பட்ட

மகேஸ் (பாலகிருஷ்ணன் மகேஸ்வரன் - கோட்டைக் கல்லாறு, மட்டக்களப்பு)

வல்வெட்டித்துறை, வேம்படிப்பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றி வளைப்பின் போது, சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

மேஜர். சலாம் (சின்னக்குட்டி நல்லராசன் - 'தமிழ்வளர்சோலை' இமையாணன் உடுப்பிட்டி)

1991-ம் ஆண்டு மட்டக்களப்பு பெரியபோரதீவுப்பகுதியைச் சுற்றி வளைத்த சிறிலங்கா இராணுவத்தினர் மற்றும் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட 3 தமிழர்கள்.

வவுனியாவில், சிறிலங்கா இராணுவத்தினர் நிலைகொண்டுள்ள கூழாங்குளம் பகுதியிலுள்ள தமது வீட்டைப் பார்வையிடச் சென்று காணாமல் போன தந்தை, பத்து வயது மகன் மற்றும் கூடச்சென்ற இளைஞன் ஆகிய 3 தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/4488)

### சிந்தனைக்கு

மனிதனிடம் தவறாக நடந்து விட்டு இறைவனிடம் சரியாக நடந்து கொள்ள எவராலும் முடியாது.

— ஹென்ரி எமெர்ஸன் ஃபாஸ்றக்


# ஈழநாதம்

61, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் 02-06-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் 05


## சிறிலங்கா அரசு நடத்தும் கலாசார அழிப்புக்கள்

சிறிலங்கா விமானப்படை விமானங்கள் நேற்று முன்தினம் நடத்திய கண்மூடித்தனமான தாக்குதலில தெல்லிப்பளை துர்க்காதேவி அம்மன் ஆலயம் பெரும் சேதத்திற்கு உள்ளாகியது கோவிலின் பெரும் பகுதி இடிந்து நொருங்கியது. விக்கிரகங்களும் ஏனைய கோவிலின் உடைமைகளும் அழிவுற்றதுடன்' தேவஸ்தானத்திலேயே பலர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர்.

சிறிலங்கா ஆயுதப் படையினர் ஆலயங்கள் மீது மேற்கொள்ளும் முதலாவது தாக்குதல் அல்ல இது. பௌத்த சிங்கள பேரினவாதத்தின் ஒரு இலக்காக எவ்வாறு இனப்படுகொலை உள்ளதோ அதேபோன்று பௌத்தம் அல்லாத மதங்களையும் அழித்துவிடுதல் என்பது அடுத்த இலக்காகும். எப்பொழுது தமிழருக்கு எதிராக இனப்படுகொலைகளை சிங்கள பேரினவாதம் கட்டவிழ்த்துவிட்டதோ அதே காலப்பகுதியில் தமிழரின், கலை. பண்பாடு அம்சங்களை அழித்துவிடுவதில் சிங்கள பேரினவாதம் முனைப்புடன் செயற்பட்டுவருகிறது.

இந்த வரிசையில் கோவில்களை அழிப்பதும் ஆக்கிரமிப்பதும் நூலகங்களை தீயிட்டுக் கொளுத்துவதும் தொடர்ந்துவரும் நடவடிக்கைகளாகவே உள்ளன. தென்னாசியாவிலேயே பெரிய கலைப் பொக்கிசமாக திகழ்ந்த யாழ். நூலகத்திற்கு சிறிலங்கா ஆயுதப்படையினர் தீயிட்டுக் கொளுத்திய பதினோராவது வருடம் நேற்று என்பதும் இங்கு நினைவு கூரத்தக்கது.

இதேவேளை சிறிலங்கா பேரினவாத சக்திகள் தனியாக இந்து ஆலயங்களை மட்டும் அழிக்கவில்லை. தமிழ் பிரதேசங்களில் உள்ள கிறிஸ்தவ ஆலயங்களையும் அவை விட்டுவைக்கவில்லை. காலத்திற்குக் காலம் கிறிஸ்தவ தேவாலயங்கள் மீதும் குண்டு வீசியும் அழி

# தாள் பணியச் சொல்லும் அரசும் தலை நிமிரும் பத்திரிகையாளர்களும்

அடுத்தடுத்து வந்த முதல்வர்கள் தனிநபர் வழிபாட்டை விடாமல் போற்றி வளர்த்திருக்கிற ஒரு மாநிலத்தில்போயஸ் தோட்டத்து அம்மன் கருத்துச் சுதந்திரத்தை சகித்துக் கொள்வதில் புதிய எல்லைகளை வகுத்து வருகிறார்பத்திரிகைகளை மதிப்பது என்ற வழக்கம் ஜெயலலிதாவிடமும் சரி அவருடைய அதிரடி ஆதரவாளர்களிடமும் சரி என்றைக்கும் இருந்தது கிடையாது. ஆனால் இரு வாரங்களுக்கு முன்பு சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா பத்திரிகைகளை அடிபணிய வைக்கும் முயற்சியில் உச்ச நீதிமன்றத்தைக் கூட மதிக்க மறுத்த போது இந்த உண்மை அப்பட்டமாகவும் தெளிவாகவும் வெளிப்பட்டது. ஆனால் ஏப்ரல் 28-ம் திகதி சட்டமன்ற நிகழ்ச்சிகளை சென்னைப் பத்திரிகையாளர்களில் ஒரு சாரார் புறக்கணித்தது இன்னொரு உறுதியான செய்தியையும் வெளிப்படுத்தியது. தாள் பணியச் சொன்னால் பத்திரிகையாளர்கள் பொங்கி எழுவார்கள்.

எம்.எல் ஏக்கள் சட்டசபையில் ரௌடித்தனம் செய்வதை விமர்சித்து இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி ஆஃப் இந்தியா (செப் - 21 - 27, 1991) பத்திரிகையில் அதன் அப்போதைய நிருபர் கே பி. சுனில் கட்டுரை எழுதியதை அடுத்து இந்தச் சர்ச்சை வெடித்தது. இந்தக் கட்டுரை குறித்து எதிர்க்கட்சித் தலைவரும் ஜெயலலிதா புகழ்பாடுபவருமான எஸ் ஆர். பாலசுப்பிரமணியம் உரிமை மீறல் பிரச்சினையை எழுப்பினார். ''சுனில் சபைக்கு வந்து மன்னிப்புத்தெரிவிக்க வேண்டும்'' என்று உரிமைக்குழு உத்தரவிட்டது.

இந்த உரிமை மீறல் பிரச்சினைக்கும் தனக்கும் சம்பந்தமே இல்லை என்று ஜெயலலிதா சொன்ன போதிலும் கூட, அவருடைய சம்மதமின்றி எதுவும் நடக்காது என்பது நன்றாகத் தெரிந்த விஷயம். ஆளும் கட்சி வட்டாரத்தில் நிலவும் மனநிலையை முத்தையா பூசிமெழுக முயற்சிக்காமல் அப்படியே வெளிப்படுத்தினார். ''கடமையுணர்வோடு தங்கள் பணிகளைச் செய்கிற பத்திரிகைகள் மீது இந்தச் சபைக்கோ அல்லது மாண்புமிகு புரட்சித் தலைவிக்கு எந்த விதமான கோப

## தமிழக நிலை பற்றி இந்தியா டுடே கருத்து

மும் இல்லை'' ஆனால் சுனில் மீது பிறப்பிக்கப்பட்டிருக்கும் கைது உத்தரவை உச்ச நீதிமன்றம் தடை செய்த போது கோர்ட்டைத் தான் கண்டு கொள்ளப்போவதில்லைஎன்று முத்தையா அறிவித்தார். தி. மு க. எம். எல். ஏ யான பரிதி இளம்வழுதியை அவையிலிருந்து வெளியேற்றிய சம்பவத்தை வெளியிட்ட தி.மு.க ஏடு முரசொலி மற்றும் கோயம்புத்தூரில் இருந்து வெளியாகும் மாலை தினசரி கோவை மாலை முரசு ஆகியவற்றின் ஆசிரியர்களான எஸ். செல்வம், எஸ். கே. சுந்தர் இருவரையும் கூடக் கைது செய்ய அவர் வாரண்ட் பிறப்பித்தார்.

பதவியேற்ற இந்தப் பத்து மாதங்களாகப் பத்திரிகைகள் குறித்த விஷயங்களில் ஜெயலலிதா அவருக்கு முந்தைய முதல்வர்கள் கருணாநிதி, எம். ஜி. ஆர் நடந்துகொண்ட பாணியிலேயே நடந்து கொள்கிறார். சட்டமன்ற நிகழ்ச்சிகளை விஷமத்தனமாக வெளியிடுவதாகச் சொல்லி 115 வருடங்களாக நடந்துவரும் நாளிதழும் பத்திரிகைத் துறையின் முன்னோடிகளில் ஒன்றுமான இந்துவை அவர் சாடினார்,

சரியாகச் செய்தி வெளியிடாத இந்தியன் எக்ஸ்பிரசும் விமர்சனத்துக்குத் தப்பவில்லை. சட்டமன்றத்தின் கடைசி நாளன்று இலஸ்ரேட் வீக்லியின் புதிய ஆசிரியர் ஸ்டேட்ஸ்மேன் நாளிதழின் சென்னை நிருபர் மீதான இரு புகார்கள் நேரடியாக உரிமைக் குழுவிற்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. அன்று ஜூனியர் விகடன் செய்தி வெளியிடும் முறையையும், ஜெயலலிதா விமர்சித்துப் பேசினார். ஜெயலலிதா செயல்படும் விதம் குறித்துக் காங்கிரஸ் தொழிலாளர் பிரிவுத் தலைவர் க. சுப்புவின் தொடர் விமர்சனத்தை நக்கீரன் வெளியிட ஆரம்பித்தபோது அ. இ. அ. தி.மு.க. ஆதரவாளர்கள் அந்தப் பத்திரிகைக் கட்டுகளைப் பறிமுதல் செய்து நடுரோட்டில் தீயிட்டுக் கொளுத்தினார்கள்.

சுப்புவின் கட்டுரைக்கான ''பரிசை மக்கள் கொடுப்பார்கள்'' என்ற ஜெயலலிதாவின் அறிவிப்பைத் தொடர்ந்து இது நிகழ்ந்தது.

இந்தத் தாக்குதல்களைக் கண்டித்து நக்கீரன் தலையங்கம் வெளியிட்டபோது அதன் பிரிண்டர் ஆர். கணேசன் ராஜ துரோகக் குற்றச்சாட்டுகளின் பேரில் ஏப்ரல் 10 அன்று கைது செய்யப்பட்டு ஏப்ரல் 20 அன்று ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டார். விடுதலை செய்யப்பட்ட ஒரு மணி நேரத்திற்குள் நெஞ்சுவலி என்று ஒரு தனியார் மருத்துவமனையில் சேர்ந்த அவர் ஏப்ரல் 27 அன்று மூளையில் ரத்தக் குழாய் வெடித்து இறந்து போனார்.

''சட்டமன்றத்தில் நிஜமான எதிர்க்கட்சி இல்லாத ஒரு நிலையில் பத்திரிகைகள் ஒரு உறுதியான எதிர்க்கட்சியாகச் செயல்பட வேண்டும் என்று ஜெயலலிதா கூறினார். ஆனால், அவர் எதிர்க்கட்சிகளை நடத்துகிற விதத்திலேயேதான் - அச்சுறுத்தலின் மூலம் பணிய வைப்பது - பத்திரிகைகளையும் நடத்துகிறார்'' என்கிறார் அ. பு. த. தி. மு. க. வின் தலைவர் திருநாவுக்கரசு.

மிரட்டிப் பணிய வைப்பது வன்முறை போன்ற குற்றச்சாட்டுகள் இப்போது அ. தி. மு க. விற்கு எதிராக வேகமாக அதிகரித்து வருகின்றன. தராசு பத்திரிகை அலுவலகத்தில் நடந்த தாக்குதலில் கட்சி சம்பந்தப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இரண்டு ஊழியர்கள் கொல்லப்பட்டு 16 பேர் காயமடைந்த இந்தச் சம்பவத்தில் முன்னாள் உள்துறை செயலர் ஆர். நாகராஜன் உட்பட 23 பேர் கைது செய்யப்பட்டார்கள். ஆனால், ஆரம்பத்தில் உற்சாகமாக செயல்பட்ட காவல்துறை இதுவரை கைது செய்யப்பட்டவர்கள் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யவில்லை கைது செய்யப்பட்டவர்களின் கைரேகை சம்பவம் நடந்த இடத்தில் காணப்படும் கைரேகைகளோடு ஒத்துப் போவதாக பொலிஸ் உறுதி செய்கிறது. மேலாக, அடையாள அணிவகுப்பின் போது காயப்பட்ட ஊழியர்கள் தாக்குதல் நடத்தியவர்களை அடையாளம் காட்டினார்கள். இந்தக் குற்றவாளிகள் அ.தி.மு.க. அமைச்சர் ஒருவரின் அடியாட்கள் என்றும், பத்திரிகை அலுவலகத்தைத் தாக்குவதற்கென்றே அமர்த்தப்பட்டவர்கள் என்றும் சொல்லப்பட்டது. பெப்ரவரியில் சட்டமன்றக் கூட்டத் தொடர் துவங்கிய போது பத்திரிகைகள் அவதூறாக எழுதும் போக்கு அதிகரித்து வருவதாக கடுமையாகச் சாடினார் ஜெயலலிதா.

இந்த விஷயத்தில் ஜெயலலிதாவின் குற்றச்சாட்டு நியாயமானது. கடந்த சில வருடங்களாக மஞ்சள் பத்திரிகைகள், அதிக அளவில் உலவி வருகின்றன. பல அவருடைய தனிப்பட்ட வாழ்க்கை பற்றி எழுதுகின்றன.

விடாமல் நடந்து வரும் இந்தப் பிரசாரத்திற்கு சில பத்திரிகையாளர்கள் தி.மு க.வைக் குற்றஞ்சாட்டுகிறார்கள். தி. மு.க. வின் ஆதரவில் திளைப்பதாகச் சொல்லப்படும் ''மஞ்சள் பத்திரிகைகளை'' பயன்படுத்தி தேர்தலில் தோல்வி கண்ட தி.மு க. நிழல் யுத்தம் நடத்துகிறது. ஆனால், தன் மீது தனிப்பட்ட முறையில் அவதூறாக எழுதிய பத்திரிகைகள் மீது ஜெயலலிதா சாட்டையை கொடுக்கவில்லை என்பதுதான் இதில் வேடிக்கை.

ஜெயலலிதாவின் செயல்களே அவருக்குப் பிரச்சினையாகின்றன. எம் ஜீ ஆர். கருணாநிதியைப் போல இவரும் பத்திரிகைகளை மிரட்டி அடக்க எவ்வளவு தூரம் முயல்கிறாரோ அத்தனைக்கத்தனை விமர்சனங்களின் வாயை அடக்குவது கடினமாகும். தமிழக மீடியா முழுவதையும் அவர் பகைத்துக் கொண்டால் இறுமாப்புக் கொண்டவர் என்கிற அவருடைய இமேஜை நீக்க 'விசுவசமான' சட்டமன்றக் கூச்சல்கள் கைகொடுக்காது. ஜனநாயகத்தில் அதிகாரத்திலிருப்பதற்குத் தரப்படும் விலை விமர்சனம் என்பதை முதல்வர் புரிந்து கொள்ளவில்லை. அவருடைய விசுவாசிகள்புதிய நெல் வகைகளுக்குக் கூட அவருடைய பெயரைச் சூட்டி மகிழலாம். ஆனால், விமர்சனங்களின் பின்னுள்ளநியாயத்தை அந்தப் புகழ் மாலைகள் மறைத்துவிட முடியாது.

சுதேச மருத்துவக் கல்லூரி

கிறிஸ்தவ தேவாலயங்கள் மீதும் குண்டு வீசியும் அழித்தும் வந்துள்ளன.

இன்று வடக்கிலும் கிழக்கிலும் வரலாற்றுச் சிறப்புமிக்க இந்து ஆலயங்கள் பல சிறிலங்கா இராணுவத்தால் அழிக்கப்பட்டுள்ளன அல்லது ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் போன்ற வரலாற்றுச் சிறப்புமிக்க இந்து ஆலயங்கள் இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ளன, இதேவேளை கிழக்கு மாகாணத்தின் எல்லைப் புறத்தில் உள்ள இந்துக் கோவில்களில் அனேகமானவை இன்று இராணுவ முகாங்களாகவே உள்ளன அதாவது தமிழரின் கலை, பண்பாட்டு அம்சங்கள் திட்டமிட்டு அழிக்கப்படுகின்றன.

இவ்வாறாக ஒருபுறம் தமிழரின் கலை பண்பாட்டு அம்சங்களைத் திட்டமிட்டு அழித்துவரும் சிறிலங்கா அரசாங்கம் மறுபுறத்தில் பௌத்த சமயத்தைப் பேணுவதற்கும், முதன்மைப்படுத்துவதிலும் அக்கறை காட்டுகின்றது. இடிந்த டகோபர்களைக் கட்டுவதிலும், புத்தர் சிலைகளைத் திருத்தி அமைப்பதிலும் கோடிக்கணக்கான பணத்தைச் செலவீடு செய்து வருகின்றது. அத்துடன் பௌத்த கோவில்களுக்கு அன்றாடம் செல்வதும், கோவில்களைப் புனரமைப்புச் செய்வதும், பௌத்தம் பற்றிப் பேசுவதும் சிறிலங்கா ஜனாதிபதியின் அன்றாட செயற்பாடுகளில் முக்கியமானவையாகவுள்ளன. இதற்கும் மேலாகத் தமிழர் தாயகத்தினுள் அகழ்வாராய்ச்சு என்ற போர்வையில் பௌத்த சின்னங்களைத் தேடுவதிலும், அதன் மூலம் சிங்களவர்கள் அங்கே வாழ்ந்தார்கள் - அதாவது இலங்கையில் முன்னர் இருந்த பௌத்தர்கள் எல்லாம் சிங்களவர்கள் - என்று நிரூபிக்க முற்படுவதிலும் பௌத்த சிங்களப் பேரினவாத சக்திகளும் அரசாங்கமும் தீவிரமாகச் செயற்பட்டும் வருகின்றன.

சிறிலங்கா அரசாங்கமும், பேரினவாத சக்திகளும் இணைந்து மேற்கொள்ளும் இக்கலாசாரப் படுகொலையானது தமிழர் தேசியத்தைத் திட்டமிட்டுச் சீர்குலைக்கும் நடவடிக்கைகளாகும்; ஒரு இனத்தின் தொன்மையையும், வரலாற்றுச் சிறப்பையின் அவ்வினத்தின் கலை, பண்பாட்டு அம்சங்களே பிரதிபலிக்கின்றன. இந்நிலையில் ஒருபுறம் இனப் படுகொலை, மறுபுறம் தமிழர் தாயகத்தை ஆக்கிரமிக்கும் அதேவேளை மேற்கொள்ளப்படும் கலாசார அழிப்பானது தமிழர்தேசியத்தை திட்டமிட்டுசீர்குலைப்பதற்கான அபாயகரமான நடவடிக்கையாகும். இச்சீர்குலைப்பு நடவடிக்கையானதுஇனபடுகொலைக்கும், ஆக்கிரமிப்பிற்கும் எந்த விதத்திலும் குறைந்ததல்ல என்பதைத் தமிழ் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

பம்பாய் ஹோட்டலில்

## காஸ்சிலிண்டர் வெடித்தது இருபத்தொரு பேர் பலி

மத்திய பம்பாயின் தாராவி பகுதியிலுள்ள ஹோட்டல் ஒன்றின் சமையலறைப் பகுதியில் காஸ்சிலிண்டர் ஒன்று வெடித்தமையால் சென்னையைச் சேர்ந்த எட்டுப்பேர் உட்பட இருபத்தொரு பேர் உயிரிழந்தனர். சுற்றுலா சென்றிருந்த சென்னை ஆவடி டாங்க் தொழிற்சாலை இருவரும் அவரது குடும்பத்தினருமாக எட்டுப்பேரும் இங்கு உயிரிழந்தவர்களில் அடங்குவர்;

எரிவாயு சிலிண்டர் வெடித்த போது அங்கிருந்து வெளியேற வேறு வழி ஏதும் இருக்காமையினாலே தான் இவ்உயிரிழப்புகள் நேரிட்டதாக பம்பாய் நகர காவல்துறை உயர் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

இச்சம்பவத்தில் பதினைந்து ஆண்கள் இருபெண்கள் நான்கு குழந்தைகள் உயிரிழந்துள்ளனர் என மேலும் அவர் தெரிவித்துள்ளார்.

## ராஜீவ் நினைவாலயம் நிறுவ நிலம் உடமையாளர் மறுப்பு

[சென்னை]

ராஜீவ் காந்தி பலியான இடம் கோவிலுக்குச் சொந்த சொந்தமானது. எனவே அவ்விடத்தில் நினைவாலயம் எழுப்பப்படக்கூடாது கோவில் தர்மகர்த்தா எதிராஜ ஜீயர் கூறியுள்ளார்.

இதனால் அவ்விடத்தில் ராஜீவ் காந்தி நினைவாலயம் கட்டும் பணி எதுவும் ஆரம்பிக்கப்படாமலேயே இருக்கிறது. இதுபற்றி சென்னையிலிருந்து வெளிவரும் ராணி பத்திரிகை ஜீயரைப் பேட்டி கண்டது.

புலித்தோல் இருக்கையில் சாய்ந்தபடி நிருபரிடம் அவர் பேசினார். அப்போது கோவில் நிலத்தில் அரசியல் கூட்டங்கள் போடக்கூடாது என்பது தேர்தல் சட்டம் ஆனால அதை மீறி காங்கிரஸ் காரர்கள் இங்கே கூட்டம் போட்டார்கள். அதுபற்றி என்னிடம் ஒரு வார்த்தைகூடனும் கேட்கவில்லை. முதல் கோணல் முற்றும் கோணல் என்பது போல முதல் தவறைத் தொடர்ந்து முழுவதும் தவறாகவே நடந்து விட்டது.

இப்பொழுது அந்த இடத்தில் நினைவாலயம் கட்டப் போவதாக சொல்கிறார்கள் அதையும் முறையாகச் செய்யவில்லை எனது ஒப்புதல் இல்லாமலே அந்த இடத்தை எட்டுலட்சம் ரூபாவுக்கு பதிவு செய்திருக்கிறார்கள் இதை எதிர்த்து வழக்குப் போட்டேன். ஜீயர்சொல்கிறபடி நான் கேட்க வேண்டும் என்று நீதிமன்றம் கட்டளையிட்டது

மறைந்த தலைவர்களுக்கு அவர்கள் உயிர் நீத்த இடத்தில் தான் நினைவிடம் கட்ட வேண்டும் என்பதில்லை. மகாத்மா காந்தி பிர்லா மாளிகையில் சுடப்பட்டார். ஆனால் அவருக்கு ராஜ்காட்டில் நினைவிடம் கட்டியிருக்கிறார்கள் இந்திராகாந்தி ஜன்பத்தெரு வீட்டில் கொல்லப்பட்டார். அவரது நினைவிடம் சக்திஸ்தலில் நிறுவப்பட்டது லால் பகதூர் சாஸ்திரி ரஷ்யாவில் உயிர் நீத்தார். அவருக்கு டெல்லியில் நினைவிடம் கட்டினார்கள்.

ராஜீவ் காந்திக்கு மட்டும் அவர் உயிர் துறந்த இடத்திலேயே நினைவாலயம் கட்ட வேண்டும் என்று சொல்வது ஏன்? அது கோவில் நிலம் என்று எண்ணம் கூட சில காங்கிரசுக்காரர்களுக்கு இல்லாமற் போய் விட்டது.

வாழப்பாடி இராமமூர்த்தி என்னைச் சமாதானபபடுத்த தூது அனுப்பினார் அவர் சார்பாக தண்டபாணி வந்து என்னைச் சந்தித்தார் வாழப்பாடியார் உங்களைப் பார்த்துப் பேச விரும்புகிறார் சம்மதம் தெரிவித்தால் அழைத்து வருகிறேன் என்று சொன்னார்

மடாதிபதி என்ற முறையில் யாரையும் சந்திக்க மறுப்பது தவறு. எனவே 'சரி' சொன்னேன் ஆனால் ஒரு நிபந்தனை ''வாழப்பாடி என்னை வந்து சந்திக்கட்டும் ஆனால் என்னை மெட்டல் டிடெக்டர் வைத்து சோதனை போடக்கூடாது என்றே சொன்னேன் இதுவரை வாழப்பாடியார் இங்கு வரவில்லை. இப்படியிருப்பதால் எனக்கு மிரட்டல்கள் வருகின்றன வெட்டுவேன் குத்துவேன் என்கிறார்கள்.

நான் உயிருக்குப் பயந்தவன் அல்ல. உயிர் எனக்கு துச்சம் நேர்மையும், துணிச்சலும்தான் என் உயிர் மூச்சு என்று அவர் கூறினார்.

## இந். ஜனாதிபதிக்கு தமிழக ஆளுநரும் போட்டியிடலாம்

(சென்னை)

தற்போதைய தமிழக ஆளுநர் பீஷ்ம நாராயண் சிங் இந்தியாவின் அடுத்த குடியரசுத் தலைவர் பதவிக்குப் போட்டியிடலாம் என்று ஜூனியர் விகடன் இதழ் ஹேஸ்யம் கூறியுள்ளது.

எனினும் இவர் எந்தக் கட்சியின் வேட்பாளராக நிறுத்தப்படுவார் என்பது பற்றி எதுவும் அதில் தெரிவிக்கப்படாத போதும், தமிழகத்திலுள்ள ஜோதிடர் ஒருவர் அவருக்கு கூறியதன் அடிப்படையில் அவரது நண்பர்கள் மகாயாகம் மற்றும் பிரார்த்தனை வழிபாடுகளில் ஈடுபட்டிருப்பதாக ஜூனியர் விகடன் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

## தமிழகப் பொலிஸார் விசாகனைத் தேடுகின்றனர்

(சென்னை)

விசாகன் என்னும் பெயருடைய விடுதலைப் புலிகளுடன் தொடர்புடைய ஒருவர் தமிழகத்திற்குச் சென்றுள்ளதாகக் கூறப்படுவதையடுத்து தமிழகப் பொலிசார் உஷார்படுத்தப்பட்டுள்ளனர். இவர் வெடிமருந்து, கண்ணிவெடி என்பவற்றில் பயிற்சிபெற்றவர் என்றும், தமிழக மீட்புப்படையைச் சேர்ந்த இளைஞர்களுக்குப் பயிற்சியளிக்கும் முகமாக அந்தமான், நிகோபார் தீவுகளுக்குச் செல்லும் வழியில் தமிழகம் சென்றுள்ளார் என்றும் கூறப்படுகின்றது.

இதேவேளை யாழ்ப்பாணத்திலபுலிகளிடம் ஆயுதப்பயிற்சி பெற்றவர்கள் என்ற சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்ட தமிழக இளைஞர்களில் பன்னிரண்டுபேருக்கு எதிராக இம்மாத இறுதியில் சென்னையில் வழக்குப்பதிவுசெய்யப்படவுள்ளது.

### கன்னியாகுமரிக்கு விஜயம்

தற்போது இந்தியா வந்திருக்கும் மொரீசியஸ் பிரதமர் வீராசாமி ரிங்காடூவும் அவரது பாரியாரும் இன்று கன்னியாகுமரிக்கு விஜயம் செய்யவுள்ளனர். அங்கு விவேகானந்தர் நினைவு இல்லத்தைப் பார்வையிடுவதோடு பகவதி அம்மன் கோயிலுக்கும் விஜயம் செய்யவுள்ளனர்.

### சுட்டுக்கொலை

பாகிஸ்தானின் ஷியா முஸ்லிம் கட்சித் தலைவர்களில் ஒருவரான சிக்கந்தர் ஹுசைந்ஷா இனந்தெரியாத துப்பாக்கி ஏந்திய நபர்களின் வேட்டுக்கு இலக்காகி அண்மையில் உயிரிழந்தார். லாகூரில் இச்சம்பவம் நடந்துள்ளது.

சுதேச மருத்துவக் கல்லூரி

## காலவரையின்றிமூடியதற்கு மாணவர்கள் கண்டனம்

(கொழும்பு)

கம்பஹா விக்கிரமாராய்ச்சி சுதேசிய மருந்துக் கல்லூரியைக் காலவரையறையின்றி மூடியது குறித்துப் பல்கலைக்கழகங்கள் மாணவர் சம்மேளம் கண்டனம் தெரிவித்துள்ளது.

கம்பஹா சுதேசிய மருத்துவக் கல்லூரிக்கு பல்கலைக்கழக அந்தஸ்து வழங்கும்படியான மாணவர் கோரிக்கைக்கு எதிராக அரசு கல்லூரியைப் பூட்டுவதன் மூலம் பதிலளித்துள்ளது என்று பல்கலைக்கழகங்கள் மாணவர் சம்மேளனம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாதாரண விஷயமொன்றுக்கு தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனங்களைப் பூட்டுவது தேசத்துக்குப் பெரும் இழப்பாகும் என்றும்;

சுதேசிய மருந்துவக் கல்லூரியை பல்கலைக்கழக கல்லூரியாக்குவதன்மூலம்பிரச்சினைக்குத்தீர்வு காணலாம் மாறாக்கல்லூரியைப் பூட்டுவதன் மூலம் தீர்வைக் காண முடியாது என பல்கலைக்கழகங்கள் மாணவர் சம்மேளம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதேவேளை சுதேசிய வைத்தியக் கல்லூரியை மூடியதற்கு சிறி ஜெயவர்தன புர பல்கலைக்கழக மாணவர்களும் கண்டனம்வெளியிட்டுள்ளனர்

பல்கலைக்கழக

## மாணவர் இருப்பிடவசதிக்கு 70மில்லியன் ஒதுக்கப்படும்

(கொழும்பு)

பல்கலைக்கழக மாணவர்களுக்கு இருப்பிட வசதிகளை ஒழுங்கு செய்வதற்கென நாட்டிலுள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கும் 70 மில்லியன் ரூபா வழங்கப்படுமென்று அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழக மாணவர்களுக்குத் தற்காலிக இருப்பிட வசதிகளை வழங்கவே இத்தொகை ஒதுக்கப்பட்டுள்ளதாக உயர்கல்வி அமைச்சர் ஏ சி எஸ். ஹமீட் தெரிவித்தார்

இதற்கிடையில் கொழும்புப் பல்கலைக்கழக மாணவர்களுக்கென மெட்டக் கொடவிலும், இரத்மலானையிலும் இரண்டு வீடுகள் வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ளன. அண்மையில் கொழும்புப்பல்கலைக்கழக மாணவர்கள் இருப்பிட வசதி கோரிப் போராடியது தெரிந்ததே.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு

## பெறும் இலங்கையருக்கு கடனாக விமானச் சீட்டு?

வெளிநாடுகளில் வேலை வாய்ப்புப் பெறும் இலங்கையர்களுக்கு விமானப் பயணச் செலவைக் கடனாக வழங்க வர்த்தக வங்கிகள் முன்வந்துள்ளன.

விமானப் பயணச் சீட்டுகளுக்கென 20,000 ரூபாவுக்கு மேற்படாத தொகையை வர்த்தக வங்கிகள் வழங்கும் வர்த்தக வங்கிகள் வழங்கும் இந்தக் கடன் முற்பணத்தில் 60 வீதத்தை சிறிலங்கா ஏற்றுமதி கடனுதவி காப்புறுதிக் கூட்டுத்தாபனம் வங்கிகளுக்குக் கொடுத்துதவவுள்ளது.

கடனாகப் பெறப்படும் பணம் 12 மாதங்களுக்கு மேற்படாத தவணையில் திரும்பத் தரப்படவேண்டும். 2,500ரூபாவுக்கு மேலானசம்பளம்பெறும் இருவர் இத்தொகைக்குஎதிராகப் பிணை நிற்க வேண்டும் என்று தெரிவிக்கப்படுகிறது.

மிகக் குறைந்த வட்டியில் வழங்கப்படவிருக்கும் இந்தக் கடனுக்கு விண்ணப்பிப்பவர்கள் நியமனக் கடிதம் மற்றும் ஆவணங்களையும் விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

ஈழநாதம்

# திருத்த முடியாதநிலையில் சீனப் பீரங்கிப் படகுகள்

[கொழும்பு]

சீனாவிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டு பழுதடைந்த விசைப் படகுகளின் திருத்த வேலைகளை முற்றாகச் செய்ய முடியவில்லை என சிறிலங்கா கடற்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இயந்திரங்கள் ஓரளவு திருத்தப்பட்ட போதிலும் போதிய மின்வலுவை அவை உற்பத்தி செய்ய முடியாத நிலையில் இருக்கின்றன. இதனால் படகுகளை உரிய வேகத்தில் செலுத்த முடியவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

கடந்த பெப்ரவரி மாதத்திலிருந்து இருபது சீனப் பொறியியலாளர் பழுதுபார்க்கும் வேலையில் ஈடுபட்டும் இதுவரை திருத்த வேலைகள் முடிவடையவில்லை

இப் பீரங்கிப் படகு ஒவ்வொன்றும் 150 மில்லியன் ரூபாவுக்கு 1989 இல் கொள்வனவு செய்யப்பட்டு 1990 இல் செப்டெம்பரில் சிறிலங்காவுக்குக் கொண்டு வரப்பட்டன

கடற்கரை ஓரங்களில் தாக்குதல்களை மேற் கொள்ளக் கூடியதாகவும் 37 மி.மீ., மற்றும் 25 மி.மீ. துப்பாக்கிகள் இந்தப் படகுகளில் பொருத்தப்பட்டுள்ளன.

இந்தப்படகுகள் கொள்வனவு செய்யப்பட்ட முறை குறித்து பாதுகாப்பு அமைச்சு விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது.

திருகோணமலையில் கடந்த ஒன்பது மாதங்களாகக் கைவிடப்பட்ட நிலையிலிருந்த மூன்று பீரங்கிப் படகுகளில் இரண்டு சிறிலங்கா கடற்படையிடம் இப்பொழுது ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவை இதுவரை யுத்தத்தில் ஈடுபடுத்தப்படவில்லை. யுத்தத்தில் ஈடுபடுத்தப்பட்ட பின்னர் தான் இப்படகுகளின் பயன் பொருத்தம் பற்றி தீர்மானிக்க முடியுமென சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



கப்டன் சுஜாத்தா

(யோகராஜா அனுசுயா)

வீர ஜனனம்: 21-03-72

வீரச்சாவு: 14 06-91

திதி: 02-06-92

இச்சை போல் இருந்து வாழ

ஈடபுழு எலும்பும் கோணும்

## தனிநாடு

என்றார்.

சுதந்திரக்கட்சி மத்தியகுழு தெரிவுக்குழுவைப் புறக்கணிப்பது என்ற முடிவை மீளாய்வு செய்யும்படியும், முடிவில் மாற்றமெதுவும்செய்வதில்லை என்று பிடிவாதமாக நிற்பது ஒரு தனிநாட்டை அமைப்பதற்கு வழிவகை செய்யும் என்று புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் எச்சரித்துள்ளார்.

## சுதந்திர

தெரிவிக்கப்படுகிறது

இனப்பிரச்சினை தேசிய பிரச்சினை என்பதால் மத்தியகுழு எடுத்த முடிவை மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என்றும், அரசு வேண்டுமென்றே இனப்பிரச்சினைக்குத் தீர்வொன்றைக்காணாமல் இழுத்தடிக்கின்றது என்றும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி இந்த விஷயத்தில் முன்னுதாரணமாகச் செயற்படவேண்டிய அவசியம் குறித்து அனுரா வற்புறுத்திப் பேசினார் மகிந்தா ராஜபக்ஷவும் ...

## உதைபந்தாட்ட அரையிறுதிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

திருமலை நட்சத்திரம் விளையாட்டுக்கழகத்தின் முதலாவது ஆண்டுநிறைவை முன்னிட்டு யாழ் தொழில்நுட்பக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஏழுபேர் கொண்ட மட்டுப்படுத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டியின் அரையிறுதி ஆட்டம் இன்று நடைபெற உள்ளது.

இன்றைய ஆட்டத்தில் மாலை 4.00 மணிக்கு யாழ் பல்கலைக்கழக அணி ஊரெழு றோயல் அணியை எதிர்த்து விளையாடும்

## புலிகளுடன்

தேசிய நன்மைகருதி நாமும் நடவடிக்கை எடுக்கலாம்.

— இவ்வாறு அமைச்சர் எஸ். தொண்டமான் ஐலண்ட் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இனப்பிரச்சினைக்கு நாம் தீர்வொன்றை எட்ட வேண்டும். பாரிய செலவை ஏற்படுத்தும் இந்த யுத்தம் வெறும் ஆடம்பரமாகும் கடந்த பல ஆண்டுகளாக நடைபெறும் இந்த யுத்தத்தினால் வாழ்க்கைச் செலவுதன் அதிகரித்துள்ளது என்றும்,

இந்தியபடை இங்கிருந்தது சிறிலங்காப் படையும் இந்தியப்படையும் சேர்ந்து பிரபாகரனைப் பிடித்திருக்கலாம். இது நடைமுறைச் சாத்தியமற்றதால் இரு தரப்பினராலும் பிரபாகரனைப் பிடிக்க முடியவில்லை. பிரபாகரனை நாட்டைவிட்டுவெளியேற்றித் தம்மிடம் ஒப்படைக்கும்படி இந்தியா கேருகிறது. பிரபாகரனை மாத்திரமல்ல சாதாரணபுலிகளின் தலைவர்களைக் கூட உயிருடன் பிடிக்க முடியாது என்பது எமது அனுபவமாகும். இவ்வாறு மேலும் தெரிவித்தார்.

## தாக்குதலில்லா

கியதும் தெரிந்ததே.

இதனைத் தொடர்ந்து சிறிலங்கா இராணுவத்தினர் அம்புலன்ஸ்மீதுதாக்குதல் நடாத்த மாட்டோம் என உறுதி அளிக்கும்வரை இவ் அம்புலன்ஸ் ...

## மங்கள முனசிங்க

இதனை வரவேற்றது. அரசு மங்கள முனசிங்காவைத் தலைவராக உடன் நியமித்தது தெரிந்ததே.

சுதந்திரக்கட்சிக்குள் இயங்கும் ஹெல உறுமைய குழுவின் நிர்ப்பந்தகதில் சுதந்திரக் கட்சி தெரிவுக்குழுவைப் பகிஷ்கரிக்க முடிவு செய்திருப்பதை அடுத்து மக்கள் தெரிவுக்குழுவின்மேல் நம்பிக்கையிழந்துள்ளனர். இந்தப் பின்னணியில்

மங்கள முனசிங்கா தெரிவுக் குழுத்தலைவர் பதவியிலிருந்து விலக உத்தேசித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## இறந்தோர்

தொழிற்சாலையில் பொறியியலாளராக கடமையாற்றும் ஏழாலையைச் சேர்ந்த பெண்ஒருவரும் மாவிட்டபுரத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவரும் பலியாகியதாக தெரிய வருகிறது. [க, ச]

## புளொட் காயம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள களுதாவளையில் விடுதலைப்புலிகளால் வைக்கப்பட்டிருந்த கைக்குண்டு ஒன்றில் சிக்கிய புளொட் உறுப்பினர் ஒருவர் காயமடைந்திருக்கிறார். பாதுகாப்புப் படையினருடன் இணைந்து மேற்படி பகுதியில் தேடுதல் நடாத்திக்கொண்டிருந்த சமயமே இச் சம்பவம் இடம் பெற்றதாக கூறப்படுகிறது.

# எல்லை மீது வந்த எதிரியை விரட்ட தம் உயிர் தந்த வேங்கைகள்!



லெப், இறையன்பன் (ஜோன்சன்)

திருச்செல்வம் ரவிச்சந்திரன்



கப்டன், செல்வன்

செல்லத்துரை தெய்வசபாநாதன்



கப்டன் வீரத்தேவன் (பியூஸ் மார்க்)

துரைராசா சிவலிங்கம்



லெப். புகழேந்தி (லம்பா)



கப்டன். பாவாணன் (கெனடி)



வீரவேங்கை இன்பன்

கணேசப்பிள்ளை

இச்சை போல இருந்து வாழ
ஈபபுழு எலும்பும் தோணும்
உச்சமாய் மனித ஜென்மம்
சுதந்திர உணர்ச்சியின்றி
நச்செனும் அடிமை வாழ்வை
நயந்திட ஞாய முண்டோ
நிச்சய சபதம் பூண்டு
சுதந்திரம் நிலைக்கச் செய்வோம்.

— நமக்கல் கவிஞர்

இன்று எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், இயக்க நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

தர்மவாசம்,
அல்வாய் மேற்கு, திக்கம்.

நீங்கா நினைவுடன்
குடும்பத்தினர்

[2622]

# ஓராண்டு நினைவஞ்சலியும் அண்டுத்திதியும்



மண்ணில் மலர்ந்தமை 69-02-17

மண்ணுக்காய் மறைந்தமை 91-06-14

## 2-ம் லெப்டினன்ட் அருணா
(நவமணி சின்னையா)

திதி: 02-06-92

காலங்கள் பலவந்து
கோலங்கள் பல செய்திடினும்-இதய
ஓலங்கள் மாறிடுமோ-அருணா
உன்
நினைவுகள் நீங்கிடுமோ - எம்நெஞ்சை விட்டு
தூங்காத உணர்வோடு
துயில் நீ கொண்டாலும்
ஏற்றி விட்ட கொள்கைத் தீ
அணைந்திடுமோ-உன்
ஓராண்டு நினைவாக உருகி நிற்கும்

புலோலி தெற்கு,
புலோலி.

— குடும்பத்தினர்

(சி-4490)

குறித்து அனுரா வற்புறுத்திப் பேசினார் மகிந்தா ராஜபக்ஷவும் வேறு பல பாராளுமன்ற உறுப்பினர்களும் அனுரா பண்டாரநாயக்காவின் கருத்தை ஆதரித்துப் பேசிய தாகத் தெரிவிக்கப்படுகிறது.

சி.வி. குணரட்ணாவும், ஆனந்ததஸ நாயக்காவும் மத்திய குழுக்கூட்டத்தில் அனுராவுக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தார்கள் என்று சுதந்திரக்கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன

### 11 வேங்கைகள்

கேணி, தண்ணீரூற்று, முள்ளியவளை, முல்லைத்தீவு] ஆகியோருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்

### அலயபில

மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இச்சண்டை மாலை 3 30 மணிவரை நீடித்தது.

இத்தாக்குதல்களில் இராணுவத்திற்கு பாரிய இழப்புகள் ஏற்பட்டன. இத்துடன் இராணுவ கவசவாகனமொன்று விடுதலைப் புலிகளால் நாசமாக்கப்பட்டது

இத் தாக்குதல்களில் பதினொரு விடுதலைப் புலிகள் வீரச்சாவடைந்தனர்.

மாட்டோம் என உறுதி அளிக்கும்வரை இவ் அம்புலன்ஸ் மானிப்பாயிலிருந்து சேவையிலீடுபடும் என தெரிவிக்கப் படுகிறது

### வீரச்சாவு

அன்று சிறிலங்கா இராணுவத்துடன் நடைபெற்ற பெரும் மோதலில் வீரவேங்கை மூகிலன்(பலசிதம்பரநேசன் தேவராஜன், கல்லுண்டாய் வைரவர் கோவிலடி, நவாலிதெற்கு மானிப்பாய்) வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

### மாந்தையில்

இத் தாக்குதல்களினால் ஆறுக்கு மேற்பட்ட இராணுவத்தினர் பலியாகினர்.

அத்தோடு, இந்த இராணுவத்தினருக்கு உதவியாக முகாமிலிருந்து முன்னேறி வந்த இராணுவத்தினர் மீதும் ஐந்து நிமிடநேரத் தாக்குதல் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்டது.

இத் தாக்குதலுக்கு ஈடுகொடுக்கமுடியாத சிறிலங்கா இராணுவத்தினர் பின்வாங்கி முகாமை சென்றுவிட்டனர்.

பெருமளவு அயுதங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

போராளிகள் தரப்பில் இழப்பு எதுவுமில்லை.


யாழ். மாவட்ட
பேக்கரி உரிமையாளர் சங்கம்

## வருடாந்தப் பொதுக் கூட்டம்

இடம்:- யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரி
காலம்:- 7-6-1992 ஞாயிறு காலை 9.00மணி

### நிகழ்ச்சி நிரல்

i) மௌன அஞ்சலி
ii) தலைவர் உரை
iii) வருடாந்தப் பொதுக் கூட்ட அறிக்கை
iv) சிறப்புரை:-
  i) திரு. செ. பத்மநாதன் (திட்டப் பணிப்பாளர்)
  ii) திரு. த. மகாதேவன்(உணவுமருந்துப் பரிசோதகர்)
  iii) விடுதலைப் புலிகள் முக்கிய பிரமுகர்கள்
v) சங்கத்தின் உபவிதிகளை ஆராய்தல் அங்கீகரித்தல் செயற்குழு தீர்மானங்களை பரிசீலித்தல்
vi) நிர்வாகிகள் தெரிவு

அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது சமுகம் தருமாறு வேண்டுகின்றோம். (2628)


லெப். புகழேந்தி (லம்பா)
பொன்னுத்துரை மதனசிங்கம்

கப்டன். பாவாணன் (கெனடி)
பத்மநாதன் மயூரன்

வீரவேங்கை இன்பன்
கணேசப்பிள்ளை துஸ்யந்தன்

வீமன்காமம் பகுதியிலிருந்தும், கட்டுவன் தச்சன்காடு பகுதிகளிலிருந்தும், இரண்டு பொம்மர்கள், இரண்டு உலங்கு வானூர்திகள் ஒரு வேவு விமானம் மற்றும் ஆட்லறி ஷெல் தாக்குதல்களின் உதவியுடன் 30-05-92 அன்று காலை 5 30 மணியளவில் முன்னேற முயன்ற சிங்களப் படையினரை எதிர்த்து விடுதலைப்புலிகள் நடத்திய துணிகர தாக்குதலில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இச் சண்டையில் இராணுவத்தினரின் டாங்கி ஒன்றும் புலிகளால் சேதமாக்கப்பட்டது. இத் தீரமிக்க தாக்குதலில் பதினொரு வீரவேங்கைகள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர் இவர்களுக்கு விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்தியுள்ளனர்.



வீரவேங்கை வேல்மாறன்
ஐயாத்துரைமனோகரன்



வீரவேங்கை வெற்றிஅரசன் (ஜெயந்தன்)
கிஸ்ணபிள்ளை நாகலிங்கம்



லெப். புகழேந்தி (நிதி)
சிவசுப்பிரமணிய உ சபபூர்நாதன்



லெப். நற்குணம் (நிரோஜன்)
சண்முகநாதன் யோகநாதன்



மேஜர் எழிலமுதன் (சுதன்)
நமசிவாயம் உமாசுதன்


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992ஆம்ஆண்டு ஜூன் மாதம் 02 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.